1979 பிப்ரவரி 22]

திரு. எஸ். ஜே. இராமசாமி : தாங்கள் இந்தப் பக்கமே பார்ப்பதில்லை...................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து அமருங்கள். கேள்வியைத் தாங்கள் கேட்கின்றீர்கள். ஆனால் அந்தக் கேள்வி வரும்போது தாங்கள் இல்லை.

பனைப் பொருட்கள் தயாரிப்பு நிறுவனங்கள்.

வினா எண் 133—திரு. இரா. அமிர்தராஜ் : மாண்புமிகு கிராமத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நெல்லை மாவட்டம் திருச்செந்தூர் தொகுதியில் பனைபொருட்கள் தயாரிக்கும் கைத்தொழில் நிறுவனம் அமைக்கும் குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எங்கெங்கு அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :

(அ) (ஆ) : வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யத் தக்க பனை ஓலைப் பொருட்கள் திருச்செந்தூர் அருகே உள்ள குலசேகரப் பட்டிணம், மெஞ்ஞானபுரம் ஆகிய இடங்களில் உள்ள தமிழ்நாடு மாநில பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு நிலையத்தைச் சார்ந்த மாநில இணைய யூனிட்டுகள் மூலம் பயிற்சி பெற்ற பெண்களைக் கொண்டு உற்பத்தி செய்யப் படுகின்றன. சுமார் 200 குடும்பங்கள் இதில் ஈடுபட்டுள்ளன. புதிதாக நிறுவனம் அமைக்கும் குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

திரு. இரா. அமிர்தராஜ் : தலைவர் அவர்களே, திருச் செந்தூர் பகுதியில் அதிகமான பனைகள் இருக்கின்றன. இதனால் மூலப் பொருட்கள் சுலபமாக கிடைக்க வழிவகை உள்ளது. அந்த அடிப்படையில், அடிப்படைத் தொழில் வாய்ப்புகள் இல்லாத நிலையில் உடன்குடி, குலசேகரப்பட்டிணம், ஆறுமுகனேரி, சீருடையாபுரம், பரமன்குறிச்சி, மெய்யூர் போன்ற பகுதிகளில் அதிகமான மக்கள் வாழ்கின்றர்கள். அப்படிப்பட்ட இடங்களில், இருக்கின்ற மக்களின் எண்ணிக்கையை மனதில் கொண்டு, இந்த நிறுவனங்கள் அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, திருச்செந்தூர் தொகுதி முழுவதுமாக எவ்வளவு பனை பொருள்கள் கிடைக்கின்றனவோ, அவைகளை எல்லாம் இந்த இரண்டு மையங்களில் பயிற்சிபெற்ற ஆண், பெண்களை வைத்து துணை பொருட்கள் உற்பத்தி செய்து, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் பணியில் ஈடுபட்டிருக்கிறோம். அங்கு கிடைக்கக் கூடிய மூலப் பொருட்களின் அளவு அதிகமாக இருக்கிறது. அதனால் மேலும் பயிற்சி நிலையஙகள் தேவைப்படுகின்றன என்ற சூழ்நிலை வருமானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனையை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்த அளவில் திருநெல்வேலி, இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களில் பனைத் தொழிலிலே மிகவும் அதிகமாக ஈடுபட்டிருப்பதால், இந்தப் பனைத் தொழிலுக்கென்று ஒரு வாரியம் அமைப்பதற்கு அரசுக்கு உத்தேசம் இருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, இப்போது தமிழ்நாடு மாநில பனைவெல்ல விற்பனை இணையம்என்ற தனியான நிறுவனம் ஒன்று இருக்கிறது. ஒவ்வொரு பகுதியிலும் பனைவெல்ல கூட்டுறவு சங்கம் இருக்கிறது. மாவட்ட அளவிலே சம்மேளனமும், மாநிலத்திலே ஒரு இணைப்பும் இருக்கின்றன. இது பற்றி அடுத்த கேள்வியில் விளக்கம் வர இருக்கின்றது. அடுத்த கேள்வி வரும்போது இதற்குப் பதில் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இக்கேள்வி திருச்செந்தூர் தொகுதியைப் பற்றியது. இப்படி எல்லோருக்கும் இந்தக் கேள்வியில் சந்தர்ப்பம் அளிக்க இயலாது. அடுத்த கேள்வி 134.

மாநில பனைவெல்லக் கூட்டுறவு சம்மேளனம்.

*வினா எண். 134 —திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நமது மாநிலத்தில் உள்ள மாநில பனை வெல்லக் கூட்டுறவு சம்மேளனத்தைக் கலைத்து விடுவது குறித்து ஏதேனும் முடிவு எடுத்துள்ளதா ?